# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 01.04.2026**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 4078/SCIC/2023**

திரு அ.தினேஷ்குமார் புகார்தாரர்
321, ராயல் நகர், வடக்கு மாதவி ரோடு
பெரம்பலூர் - 621 212.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
செட்டிக்குளம், பெரம்பலூர்-621 104.

**ஆணை**

1.இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 06/11/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **“ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 16/09/2023 தேதியிட்ட மனுவிற்கு, விசாரணையின் போது ஆஜராகியுள்ள தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிகுளம் சார்பதிவகம் அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர் என்பவர் மீது, சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை 18/12/2025 அன்று ஆணையத்தில், சார்பதிவாளர், செட்டிக்குளம் சார்பதிவகம் அவர்கள் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.”**

2. **மேற்குறிப்பிட்டவாறு, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிகுளம் சார்பதிவகம் அவர்களிடமிருந்து காரண**

**விளக்கம் குறிப்பாணைக்கு 15/12/2025 தேதியிட்ட விளக்கம் பெறப்பட்டது. அவ்விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்கையில், அதனை ஆணையம் ஏற்கவில்லை. எனவே, மேற்சொன்ன திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிகுளம் சார்பதிவகம் அவர்களுக்கு ஆணையம் ரூ.1,000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) அபராதம் விதிக்கிறது. இத்தொகையினை அன்னார் அரசு கணக்கில் செலுத்திவிட்டு, அதற்கான சான்றினை 29/04/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. எனவே, இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4078/SCIC/2023</u>**

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
செட்டிக்குளம், பெரம்பலூர்-621 104.

2.திரு.மூ.சிவனேசன்,
பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
செட்டிக்குளம், பெரம்பலூர்-621 104.

**புகார்தாரர்**
திரு அ.தினேஷ்குமார்
321, ராயல் நகர், வடக்கு மாதவி ரோடு
பெரம்பலூர் - 621 212.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை - 600 028.

2.பதிவாளர் (for follow up)
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC